கழகத் தலைவர் ஆணைக்கிணங்க

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் கள ஆய்வுக்குழு உறுப்பினர்கள் கழக பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணா, கழக இளைஞரணி துணைச் செயலாளர் கே.ஈ.பிரகாஷ் எம்.பி. ஆகியோர் கள ஆய்வு மேற்கொள்ளும் விவரம்!

மாவட்டச் செயலாளர் பி. கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தேதி	கிழமை	தொகுதி	இடம்
18-5-2026	திங்கள்	எழும்பூர்	உமா சுராஜ் மஹால் அங்காளம்மன் கோவில் தெரு, சூளை
21-5-2026	வியாழன்	கொளத்தூர்	அம்ரீஷ் மஹால் திரு.வி.க.நகர் பேருந்து நிலையம் எதிரில்
26-5-2026	செவ்வாய்	அம்பத்தூர்	எச்.பி.எம் பேரடைஸ் எம்.டி.எச் ரோடு அம்பத்தூர்.
29-5-2026	வெள்ளி	துறைமுகம்	அன்னை தெரேசா பார்ட்டி ஹால் (உடையார் மேன்ஷன்) ஆச்சாரப்பன் தெரு,மண்ணடி.
01-6-2026	திங்கள்	திரு,வி.க.நகர்	எஸ்.ஆர்.பேலஸ் பிரிக்ளின் சாலை, ஓட்டேரி
04-6-2026	வியாழன்	வில்லிவாக்கம்	முருகு மஹால், முத்தம்மன் கோயில் தெரு (கோபி கிருஷ்ணா தியேட்டர் எதிரில்) அயனாவரம்

ஆய்வுக்குழு சந்திப்பு விவரங்கள் :

காலை 9:30 முதல் மதியம் 1.30	மாநில, மாவட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், தேர்தல் பார்வையாளர், தொகுதிப் பொறுப்பாளர், தொகுதிக்குட்பட்ட முன்னாள், இன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள்
மதியம் 2.00 முதல் மாலை 5.00	சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள்மாவட்ட/பகுதி/ வட்டக் கழக நிர்வாகிகள்.தொண்டர்கள் & பொதுமக்கள்

மேற்கண்ட அட்டவணைகளில் உள்ள தொகுதிகளில் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் குறிப்பிடப்பட்ட நிர்வாகிகள் அவரவர்களுக்கென குறிப்பிடப்பட்ட நேரத்தில்அனைவரும் தவறாமல்கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

இன்று மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில்

நெல்லை மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் !

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, பங்கேற்பு!

நெல்லை.மே.17.

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (17.05.2026 – ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் கலைஞர் அரங்கில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–

கழகத்தலைவர், அன்புத்தள பதியார் அவர்களின் ஆணைப் படி,நெல்லை மேற்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம் இன்று (17.05.2026 ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணி அளவில் நெல்லை மேற்கு மாவட்ட அலுவலகம், கலைஞர் அரங்கத்தில் எனது தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

ஆகவே, தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது பங்கேற்று கருத்துக்களை வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் கிழக்கு – திருப்பூர் மத்திய – திருப்பூர் தெற்கு

திருப்பூர் வடக்கு - நீலகிரி மாவட்ட கழக நிர்வாகிகளுடன் கள ஆய்வு!

ஆய்வாளர்கள் ப.தாயகம் கவி – என்.மருது கணேஷ் அறிக்கை!

கோவை, மார்ச் 17–

திருப்பூர் கிழக்கு, திருப்பூர் மத்தியம், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, நீலகிரி மாவட்ட கழக நிர்வாகிகள் இடையே கள ஆய்வு பணி நடைபெறும் தேதிகள் வழிகாட்டு முறைகள்

மாவட்ட செயலாளர்களின் பார்வைக்கு....

கள ஆய்வாளர்கள் கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி

கழக சட்டத்துறை துணை செயலாளர் என்.மருது கணேஷ் அறிவிப்பு வருமாறு:–

கடந்த. 14.05.2026 அன்று நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் மதிப்பிற்குரிய கழகத் தலைவர் அவர்கள் அறிவித்த படி, ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் கள ஆய்வு செய்திட அமைக்கப்பட்ட குழுக்களின் ஆலோசனை கூட்டம் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் 16.05.2026 அன்று காலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள் கள ஆய்வுக் குழுவுக்கு அளித்திட்ட வழிகாட்டு முறைகளின் படி, கீழ்க்கண்ட அட்டவணைப்படி சட்டமன்றத் தொகுதிகள் தோறும் கள ஆய்வுப் பணி நடைபெற உள்ளது.

இப்பணியில் மதிப்பிற்குரிய அந்தந்த மாவட்ட செயலாளர்கள் கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணை படியும் மற்றும் வழிகாட்டு முறைகளின் படியும் கள ஆய்வுப்பணி கழகத் தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு ஏற்ப நிறைவாக நடைபெற ஏற்பாடு செய்யும் படி கேட்டுக் கொள்கிறோம்.

கள ஆய்வு நடைபெறும் சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் தேதி – நேரங்கள்

திருப்பூர் வடக்கு மாவட்டம்

1. 18.05.2026 , காலை 9.30, மற்றும் மாலை 4–மணி அவினாசி சட்டமன்ற தொகுதி

2. 19.05.2026 , காலை 9.30 , மற்றும் மாலை 4–மணி திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி

திருப்பூர் தெற்கு மாவட்டம்

3. 20.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி.

4. 23.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி

திருப்பூர் மத்திய மாவட்டம்

5. 24.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி பல்லடம் சட்டமன்ற தொகுதி.

6. 25.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி திருப்பூர் சட்டமன்ற தொகுதி.

திருப்பூர் கிழக்கு மாவட்டம்

7. 26.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி காங்கேயம் சட்டமன்ற தொகுதி.

8. 27.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி தாராபுரம் சட்டமன்ற தொகுதி.

நீலகிரி மாவட்டம்

9. 28.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி கூடலூர் சட்டமன்ற தொகுதி

10. 29.05.2026, காலை 9.30 மணி, மற்றும் மாலை 4–மணி ஊட்டி சட்டமன்ற தொகுதி

11. 30.05.2026, காலை 9.30 மணி,மற்றும் மாலை 4–மணி குன்னூர் சட்டமன்ற தொகுதி

அன்பிற்குரிய மாவட்ட செயலாளர்கள் , கழகத் தலைவர் அவர்களின் கீழ்க்கண்ட அறிவுறுத்தல் படி களஆய்வுக் கூட்டத்தினை சிறப்பாக நடத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

1. மேற்குறிப்பிட்ட தேதி களில் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட இடங்களில் கள ஆய்வு கூட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. காலையில் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, தாய்கழக நிர்வாகிகள்,

(மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், 2026–ல் போட்டியிட்ட கழக வேட்பாளர்கள், தேர்தல் பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் , பகுதி செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்க வேண்டும். குறிப்பாக தற்பொழுது பொறுப்பில் இல்லாத முன்னாள் மூத்த நிர்வாகிகளையும் கூட்டத்திற்கு கண்டிப்பாக அழைக்க வேண்டும்.

3. மாலை 4– மணிக்கு சார்பு அணிகளின் மாநில மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் பகுதி நிர்வாகிகள் பங்கேற்க வேண்டும்.

4. கூட்டத்தில் கைபேசி கட்டாயம் அனுமதி இல்லை.

5. கூட்டத்தில் தங்களது கருத்துக்களை கூற வரும் நிர்வாகிகள் மனுவாகவும் தரலாம் , அதே நேரத்தில் அந்த கருத்துக்களை சுருக்கமாக நேரிலும் தெரிவிக்க வேண்டும்.

6. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் கள ஆய்வு கூட்ட நிகழ்ச்சியை மேற்குறிப்பிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும், கண்டிப்பாக தகவல் தெரிவிக்க வேண்டும்,

7. கூட்டம் நடைபெறும் அரங்கம், உள்ளேயே நிர்வாகிகளை தனியாக சந்திப்பதற்கு தனி அறைகள் உள்ளதாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

8. கூட்டத்தின் தொடக்கத்தில் அந்த சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகள் பெயர்கள் அடங்கிய வருகை பதிவேட்டினை நுழைவு வாயிலேயே வைத்து நிர்வாகிகளிடம் கையொப்பம் பெற வேண்டும்.

இவ்வாறு கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி, கழக சட்டத்துறை துணை செயலாளர் என்.மருது கணேஷ் ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கோட்டைமேடு பகுதியில் தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன், துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், பகுதி கழக பொறுப்பாளர் பக்ருதீன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக

சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் குழுவினர் நேரில் ஆய்வு!

மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் - நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக, சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக,

தலைமைக் கழகத்தால் அனுப்பப்பட்டுள்ள கழக மகளிர் அணி செயலாளர் திருமதி. ஹெலன் டேவிட்சன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு.கே.இளமகிழன் ஆகியோர் அடங்கிய கள ஆய்வுக்குழுவினர்.

நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதி வாரியாக கீழ்கண்ட விவரப்படி - கீழ் காணும் நாட்களில் - கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு நேரில் வருகை தந்து கழக நிர்வாகிகள் அனைவரையும் தனித்தனியாக சந்தித்து பேசி சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்ய உள்ளனர்.

வ.எண்	சட்டமன்றத் தொகுதி	நாள்	நடைபெறும் இடம்
1.	ஆலந்தூர் தொகுதி	19-5-2026 செவ்வாய்	மாவட்டக் கழக அலுவலகம், ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் அருகில்
2.	திருப்போரூர் தொகுதி	20-5-2026 புதன்	மீனா மகால், திருப்போரூர்
3.	செங்கல்பட்டு தொகுதி	21-5-2026 வியாழன்	என். பி.ஆர்.திருமண மண்டபம், கூடுவாஞ்சேரி
4.	திருப்பெரும்புதூர் தொகுதி	22-5-2026 வெள்ளி	ஆர்.எம்.திருமண மண்டபம், வல்லக்கோட்டை
5.	பல்லாவரம் தொகுதி	23-5-2026 சனி	ஆனந்தா திருமண மண்டபம், குரோம்பேட்டை
6.	தாம்பரம் தொகுதி	24-5-2026 ஞாயிறு	சேகர் திருமண மண்டபம், பெருங்களத்தூர்

சட்டமன்றத் தொகுதி வாரியாக குறிப்பிடப்பட்ட நாளன்று காலை 10.00 மணியளவில் இக் களஆய்வுக்குழுவினர் வருகை தரும் போது, "அந்தந்த தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளர்கள், கழக தொகுதி பார்வையாளர்கள், அந்தந்த தொகுதியில் அடங்கிய தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்களை முதலில் தனித்தனியாக அழைத்து பேசி ஆய்வு செய்ய உள்ளனர்.

அதைத் தொடர்ந்து மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழக நிர்வாகிகளையும் சந்தித்து இக்குழுவினர் கருத்துக் கேட்க உள்ளனர். காலை முதல் மதியத்திற்குள் இக்கருத்து கேட்பு பணி நடைபெற உள்ளது.

மதியத்திற்கு மேல் இக்கள ஆய்வுகுழுவினர் கழக சார்பு அணிகளைச் சேர்ந்த மாநில - மாவட்ட நிர்வாகிகளையும் சந்தித்து கருத்து கேட்கின்றனர். அதைத் தொடர்ந்து அந்தந்த தொகுதியில் மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேருர்களில் அடங்கி உள்ள கிளைக் கழகச் செயலாளர்கள் - வார்டு கழகச் செயலாளர்களையும் சந்தித்து பேசி தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு செய்கின்றனர்.

எனவே சட்டமன்றத் தொகுதி வாரியாக நடைபெற உள்ள இக்கள ஆய்வின் போது அந்தந்த தொகுதியில் அடங்கி உள்ள மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் அனைவரும் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இருவேளைகளிலும் நடைபெறும் இக்கள ஆய்வு நிகழ்ச்சியில் பங்கேற்கச் செய்யும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தா.மோ.அன்பரசன்
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

தியாகராயர் நகர் தொகுதி கழக வேட்பாளர்

ராஜா அன்பழகன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

கே.ஏழுமலை எம்.சி. – கோ.சு. மணி அறிக்கை!

சென்னை, மே 17-

தியாகராயர் நகர் தொகுதி 133, 133அ, 141, 141 அ ஆகிய வட்டங்களில் ராஜா அன்பழகன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

இது குறித்து கே.ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் தொகுதி 133, 133அ, 141, 141 அ ஆகிய வட்டங்களில் மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் ராஜா அன்பழகன் இன்று (17.5.2026, ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி அளவில் மேற்கண்ட வட்டங்களில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்த வாக்காளர்களுக்கு வீதி வீதியாக சென்று மக்களை சந்தித்து நன்றி தெரிவிக்கிறார்.

133வது வட்டக் கழக செயலாளர் பி.ஜெயக்குமார் தலைமையில் காலை 9.00 மணி அளவில் 31 முப்பத்தம்மாள் கோயிலில் துவங்கி ராஜ பிள்ளை தோட்டம், தன கோடி அம்மாள் தோட்டம், முத்துரெட்டி தோட்டம், ஆனந்த் தெரு முடிகிறது.

133 அ வட்டக் கழகச் செயலாளர் 'பி.மாரி' தலைமையில் மாசிலாமணி தெருவில் துவங்கி பகவந்தன் தெரு, ராமானுஜம் தெரு, மோதிலால் தெரு, உஸ்மான் மேட்லி தெரு சுரங்கப்பாதையில் முடிகிறது.

141வது வட்டக் கழகச் செயலாளர் கோ.உதய சூரியன் தலைமையில் முத்துரங்கம் சாலையில் தொடங்கி மேட்லி தெரு 1, 2வது தெரு வரதராஜன் தெரு, பஜனை கோவில் தெரு, சித்தி விநாயகர் கோவில் தெரு, கார்ப்பரேஷன் காலனி 1, 2, 3வது தெரு, சீனிவாச புரம் புது தெரு, லலிதாபுரம் காமராஜர் காலனியில் முடிகிறது.

141 அ வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.லட்சுமி காந்த் தன் தலைமையில் தென் மேற்கு போக்கு ரோடு, சி.ஐ.டி. நகர் 1, 2, 3, 4, 5-வது பிரதான சாலைகள், சி.ஐ.டி. நகர் 1, 2, 3, 4, 5, 6 குறுக்கு தெருக்கள். கால்வாய் கீரை தெரு, முசா தெரு, சீனிவாசன் தெரு, வ.உ.சி. தெரு, மதுரை வீரன் கோவில் தெருவில் முடிகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் சிறப்புடன் அமைய தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, சகோதர சகோதரிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு தியாகராய நகர் மேற்குப் பகுதி செயலாளர் கே.ஏழுமலை 'எம்.சி., கிழக்குப் பகுதிப் பொறுப்பாளர் கோ.சு.மணி அறிவித்துள்ளனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது குறித்து அண்ணா நகர் பணிமனையில் தொழிலாளர் அணி செயலாளர் பிடிசி ஜி. செல்வராஜ், ஊழியர் முன்னேற்ற சங்க தலைவர் பிடிசி எஸ்.ரவி,பொதுச் செயலாளர் பெரம்பூர் த. ஆறுமுகம், பொருளாளர் எம். பெருமாள் ஆகியோர் அண்ணா நகர் மேற்கு பணிமனை தொ.மு.ச. பொறுப்பாளர் பி.விஸ்வநாதன் மற்றும் பணிமனை நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டனர்.